DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.50/2021

Prosecution side witness for P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. துரை | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.01.2026**

Accused is present.

முதல்விசாரணை:–

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், தெற்கு பொம்மையாபுரம் வடக்குதெருவில் குடியிருந்து வருகிறேன். நான் பெரியராஜா என்ற பஸ் கம்பெனியில் டிரைவராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மகாராஜன், கருப்பசாமி ஆகியோர்களை தெரியும். அவர்களும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரியை தெரியும். அவர் மகன் இறந்துபோன பாலமுருகனையும் தெரியும். 18.05.2020 ஆம் தேதி கொலையுண்டு இறந்துபோன மகாராஜனின் அண்ணன் காளிச்சாமியை பாலமுருகன் என்பவர் வெட்டிவிட்டார். காளிச்சாமிக்கு முகம் மற்றும் தலையின் பின்புறம் காயம் இருந்தது. அவர் அவரது தம்பி மகாராஜன் வீட்டிற்கு வந்து தன்னை பாலமுருகன் பிள்ளையார்கோவில் நடுத்தெருவில் வைத்து அரிவாளால் வெட்டிவிட்டதாக சொல்லியுள்ளார். உடனே நானும், மகாராஜனும்அவரை பசுவந்தனை அரசுமருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். அவரை இருசக்கரவாகனத்தில் மகாராஜன் பைக்கை ஓட்ட நடுவில் காளிச்சாமியை உட்கார வைத்து பின்னால் நான் அமர்ந்தும் வந்தோம். அவருக்கு வெட்டுக்காயம் அதிகமாக இருந்ததால் அங்கிருந்த நர்ஸ் மகாராஜன் அண்ணன் காளிச்சாமியை தூத்துக்குடி அரசுமருத்துவமனைக்கு கொண்டு போக சொன்னார்கள். அதனால் 108 ஆம்புலன்சில் காளிச்சாமியை கூட்டி சென்றுவிட்டார்கள். நானும், மகாராஜனும் ஊருக்கு வந்துவிட்டோம். பின்னர் நான் வீட்டிற்குசென்றுவிட்டேன்.

மகாராஜன் பாலமுருகன் வீட்டிற்கு இரவு சுமார் 12.15 மணிக்கு சென்று எதற்கு என் அண்ணனை வெட்டினாய் என கேட்க சென்றார். அதற்கு உடன் அவரது அப்பா கருப்பசாமியும் சென்றார். அதன்பின்னர் மகாராஜனையும், அவரது அப்பா கருப்பசாமியையும், எதிரி பாலமுருகனும், அவரது அப்பா காளிப்பாண்டியும்சேர்ந்து வெட்டி கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டு நான் அங்கு சென்று அவர்களை பார்த்தேன். அவர்களில் மகாராஜனுக்கு இடது கன்னம், இடது கழுத்து, கருப்பாசாமியின் இடது கன்னம்,இடது கழுத்து ஆகிய இடங்களில் வெட்டுக்காயம் இருந்தது. காளிப்பாண்டி பாலமுருகனை வெட்ட சொன்னதாக கேள்விப்பட்டேன். அவர்கள் வெட்டியதால் மகாராஜனும், கருப்பசாமியும் இறந்துபோய்விட்டார்கள். இது சம்மந்தமாக அதை பார்த்த மகாராஜனின் மனைவியும், மாமியாரும் புகார் கொடுக்க போனார்கள். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

(எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு அளித்தபோது குறுக்குவிசாரணை இல்லை என சொன்னதன் அடிப்படையில் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.50/2021

Prosecution side witness for P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சின்னதுரை | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.01.2026**

Accused is present.

<u>முதல்விசாரணை:–</u>

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், தெற்கு பொம்மையாபுரம் கிழக்குத்தெருவில் குடியிருந்து வருகிறேன். அதை தெற்கு தெரு என்றும் கூறுவார்கள். நான் தற்போது ஆட்டு வியாபாரம் செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் டிப்ளமோ படித்துவிட்டு மேலமருதூர் பவர் பிளண்டில் மெஷின் ஆபரேட்டராக பணிபுரிந்து வந்தேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மகாராஜன், கருப்பசாமி ஆகியோர்களை தெரியும். சாட்சி கருப்புராஜை எனக்குதெரியும். 18.05.2020 ஆம் தேதி சம்பவ வீடு பக்கத்து வீடு என்பதால் நானும், கருப்புராஜும் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது அங்கே பசுவந்தனை போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது அதிகாலை மணி சுமார் 3.00 முதல் 3.30 இருக்கும். அங்கே பசுவந்தனை போலீசார் சம்பவம் நடந்த இடத்தை படம் வரைந்து எழுதிக்கொண்டிருந்தார்கள். அவ்வாறு எழுதியதில் நானும், கருப்புராஜும் கையெழுத்து செய்து கொடுத்தோம். அவ்வாறு எழுதிக்கொண்ட பார்வைமகசர் என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–2** ஆகும். அதில் முதலாவதாக கருப்புராஜும், 2 வதாக நானும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளோம். அதன்பின்னர் சுமார் 4.00, 4.30 மணியளவில் கருப்பசாமி, மகாராஜன் இறந்து கிடந்த இடத்திலிருந்து இரத்தம்பட்ட பவர் பிளாக் கல்லையும், இரத்தம்படாத பவர் பிளாக் கல்லையும் பசுவந்தனை ஆய்வாளர் எடுத்தார். வேறு எந்த பொருட்களாவது எடுத்தார்களா என்று

ஞாபகமில்லை. ஆய்வாளர் எங்கள் முன்பு எடுத்த இரத்தம்பட்ட பவர் பிளாக் கல்லையும், இரத்தம்படாத பவர் பிளாக் கல்லையும் நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். கற்களை எடுத்ததற்காக ஆய்வாளர் எழுதிக்கொண்டார். அவர் எழுதிய அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அதில் முதலாவதாக கருப்புராஜும் 2 வதாக நானும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளோம். அந்த அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–3** ஆகும். இறந்த மகாராஜன் பிரேதத்தின் அருகேயிருந்து எடுத்த இரத்தம்பட்ட சிமெண்ட் கல் உடைந்தது ஒன்று (சொத்துப்பட்டியல் வரிசை எண்.5 ல் உள்ளது) அது **அ.சா.பொ.5** ஆகும். இறந்த கருப்பசாமி பிரேதத்தின் அருகேயிருந்து எடுத்த இரத்தம்படிந்த சிமெண்ட் கல் உடைந்தது ஒன்று (சொத்துப்பட்டியல் வரிசை எண்.6 ல் உள்ளது) அது **அ.சா.பொ.6** ஆகும். இறந்த மகாராஜன் பிரேதத்தின் அருகேயிருந்து எடுத்த இரத்தம்படாத சிமெண்ட் கல் உடைந்தது ஒன்று (சொத்துப்பட்டியல் வரிசை எண்.7 ல் உள்ளது) அது **அ.சா.பொ.7** ஆகும். இது சம்மந்தமாக பசுவந்தனை ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)

நான் சொன்ன நாள், நேரத்தில் போலீசார் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வைமகசர், வரைபடம் தயார் செய்ததாக போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.50/2021

Prosecution side witness for P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராமசாமி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.01.2026**

Accused is present.

முதல்விசாரணை:–

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், தெற்கு பொம்மையாபுரம் கிழக்குத்தெருவில் குடியிருந்து வருகிறேன். அதை தெற்கு தெரு என்றும் கூறுவார்கள். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன மகாராஜன், கருப்பசாமி ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் காளிப்பாண்டி. அவர் மகன் பாலமுருகனை தெரியும். 18.05.2020 அன்று இரவு 12.00 மணிக்கு மேல் ஒரே அழுகை சத்தமாக எங்கள் தெருவில் கேட்டதால் நான் வெளியே வந்து பார்த்தேன். அங்கே மகாராஜன், கருப்பசாமி ஆகியோர்கள் வெட்டுப்பட்டு கொலை செய்யப்பட்டு கிடந்தார்கள். அங்கே கிராம ஆட்கள், மகாராஜனின் மனைவி உமா, மகாராஜனின் மாமியார் அருணாசலவடிவு ஆகியோர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் என்னிடம் அவர்களுக்குள்ள பிரச்சனையால் எதிரி பாலமுருகனும்,காளிப்பாண்டியும் வெட்டி கொலை செய்துவிட்டதாக சொல்லி அழுதார்கள். நான் உடனே போலீசில் புகார் கொடுக்க சொன்னேன். அவர்கள் போய்விட்டார்கள். நான்அதன்பிறகு வீட்டிற்கு சென்றுவிட்டு பின்னர் 5.00 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்தேன். அங்கே பசுவந்தனை காவல் ஆய்வாளரும், புளியம்பட்டி காவல் ஆய்வாளரும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் பிரேதங்களை பார்த்துகொண்டிருந்தார்கள். அவர்கள் மகாராஜன் மற்றும் கருப்பசாமியின் பிரேதத்தை விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் என்னிடம்

கேட்டார்கள், நான் மேற்படி விவரத்தை சொன்னேன். மேற்படி பிரேத விசாரணை அறிக்கைகளிலும் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)

நான் சொன்னமாதிரி சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நான் எழுதாத வெற்று தாளில் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, தற்போது போலீசார் கேட்டுக்கொண்டபடி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.
Case No. S.C. No.50/2021
Prosecution side witness for P.W.6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | ... | திரு. பாலமுருகன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | | Calling | ... |
| Village | ... | | Religion | ... |
| Taluk | ... | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.01.2026**
Accused is present.

<u>முதல்விசாரணை:–</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் வட்டம், எப்போதும்வென்றான் கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். 2020 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் வட்டம், பசுவந்தனை கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். அப்போது என்னுடன் கிராம உதவியாளராக சாமுவேல் என்பவர் இருந்தார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் மகன் இறந்துபோன பாலமுருகனை எனக்குதெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக கடந்த 19.05.2020 அன்று நான் பணியில் இருக்கும் போது காலைசுமார் 9.00 மணியளவில் பசுவந்தனை காவல் ஆய்வாளர் அவர்கள் அழைத்ததன்பேரில் நாங்கள் வடக்கு பொம்மையாபுரம் காற்றாலை அருகே சென்றோம். அங்கே காளிப்பாண்டி மற்றும் அவரது மகன் பாலமுருகன் ஆகிய 2 பேரையும் கைது செய்தார்கள். எங்கள் முன்பு அவர்களை விசாரித்தார்கள். முதலில் பாலமுருகனை விசாரித்தார்கள். அவர் தெற்குபொம்மையாபுரம் வடக்குத்தெருவில் உள்ள மகாராஜன் மற்றும் கருப்பசாமியை தன்னுடைய வீட்டின் முன்பு தன் அப்பா காளிப்பாண்டியுடன் சேர்ந்து 18.05.2020 அன்று இரவு சுமார் 12.00 மணிக்கு மேல் வெட்டிகொலை செய்துவிட்டதாக தானாக முன்வந்து வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தை அவர் சொல்ல சொல்ல மடிகணினியில் தட்டச்சு செய்தார்கள். வெட்டியதற்கு பயன்படுத்திய அரிவாளை வடக்குபொம்மையாபுரத்திற்கு அருகே முட்புதரில் மறைத்து

வைத்திருப்பதாகவும் தன்னை கூட்டி சென்றால் எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறியதன்பேரில் 19.05.2020 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் வடக்கு பொம்மையாபுரம் காற்றாலை டவருக்கு கீழ்புறம்உள்ள முட்புதரிலிருந்து எதிரி பாலமுருகன் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த இரத்தக்கறை படிந்த கொடுக்கு அரிவாளை எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றிக்கொண்டார். அந்த அத்தாட்சியில் நானும், கிராம உதவியாளர்சாமுவேலும் கையெழுத்து செய்துகொடுத்தோம். அதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–4** ஆகும். எதிரி பாலமுருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–5** ஆகும். அதில் நானும், கிராம உதவியாளர்சாமுவேலும், எதிரி பாலமுருகனும் கையெழுத்து செய்துகொடுத்தோம். அந்த அரிவாளை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அரிவாள் அ.சா.பொ.1 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)

நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்றபோது எதிரிகளை போலீசார் கைது செய்து வைத்திருந்தார்கள் என்றால் இல்லை. நான் போலீசார் அழைத்தன்பேரில் வடக்கு பொம்மையாபுரம் காற்றாலை அருகே சென்றேன். என் முன்னிலையில் 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் என் முன்னிலையில் கொடுத்தார். 1ம் எதிரி என் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டபடி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.பொ.1 அரிவாள் எங்கள் முன்பாக கைப்பற்றப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக அது உருவாக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நாட்குறிப்பு பழக்கம் உள்ளதா என்றால் ஆர்ஐதான் எழுத வேண்டும், நாங்கள் எழுதவேண்டியதில்லை. 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்கள் காவல்நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் செய்தோம் என்றால் இல்லை. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டபடி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.